# சிறப்பிகள்

மகளிர் மங்கலங்கள்

அன்பன் அருகன் இத்தாலியில் இருந்து

உலகின் பாகங்களில் எங்குபார்த்தாலும் பெண்களின் பங்களிப்பென்பது முக்கியத்துவம் வகிக்கிறது. தமிழீழப் போராட்டத்தில் பார்வையினைச் செலுத்திப் பார்க்கும் போது, ஆண்களின் பங்களிப்பு எவ்வளவுக்கெவ்வளவு ஆணித்தனமானதோ அதைப்போன்று பெண்களின் பங்களிப்பு அழுத்தமானதாகவே இருக்கிறது. ஈழப்போராட்டத்தின் விம்பத்தில் துலங்குகின்ற ஒரு விம்பம் “ பெண்விடுதலை” வார்த்தைக்கு வார்த்தை பெண்விடுதலை விதையினைத்தூவாமல் நேரடியாகவே அறுப்புக்குச் சென்றுள்ளமை பதக்கம் பெறக்கூடிய செயலாகும்...

பெண்களின் உலகப்பதிவில் அவளுடைய உடல்ரீதியிலான மாற்றங்களைப் பாதகமாகச் சுட்டிக்காட்டும் ஒருசிலரினால், ஏற்பட்ட தவறான கருத்தே தற்போது பல்வேறு இடங்களில் பெண்கள் ஒதுக்கப்பட்டும் பிரிவுக்குள்ளாக்கப்பட்டும் காணப்படும் செயற்பாடாகும்.

வேடிக்கையாகச் சொல்லப்போனால் குத்துச் சண்டையில் கூட மகளிர் பங்குபெறுகின்றனர் என்றால் பாருங்களேன்...

பலுகிப் பெருகக்கூடிய எந்த நடவடிக்கையினை எடுத்துப்பார்த்தாலும் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர் பென்பாலைச் சுட்டிக்காட்டுவதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒருவிடையத்தில் வேண்டுமென்றால் ஆண்கள் பெருமைப்பட்டுக்கொள்ளலாம், அதாவது உலகத்தில் அழகிய படைப்பினம் நமதே என்பதில்...

மனிதர்களில் மட்டுமல்ல உயிரினங்களில் அனைத்திலுமே ஆணினமே கவர்ச்சிக்குரியது. இதிலும் ஒருசில வேடிக்கையினை முன்னோர் அறிமுகப்படுத்தினர். எப்படியென்றால், அந்த அழகிய ஆணின் உயிரினத்தினை பெண்களுக்கு ஒப்பிட்டுக் கவிதை வடிப்பது...

ஏற்கனவே பல்வேறு இடத்தில் இது தொடர்பாகச் சுட்டிக்காட்டியுள்ளேன். இருந்தும் இப்போதுசற்று ...

மயில் இனத்தில் ஆண் மயிலுக்கே தோகையுண்டு...பெண்மயிலுக்குத்தேகையில்லை, ஆனால் தோகையுள்ள ஆண் மயிலுக்கே பெண்களை ஒப்பிட்டுப் பேசுவது,

மான்களில் ஆணினத்திற்கே கொம்புண்டு அதைக்கூட பெண்களுக்க ஒப்பிடுகின்றனர். ஏன்யாரும் ஆட்டை பெண்களுக்கு ஒப்பிடவில்லை ஆட்டிற்கும் மானிற்கும் பெரும் வேறுபாடில்லையே!!!!

எமது வாழ்க்கையின் அடித்தளமே முன்னைய எழுத்தாளரில்தங்கியுள்ளது போலும் , எமது சிந்தனைக்குப்பூட்டுப்போட்டது போலும் வேடிக்கையாக இருக்கிறது.

சந்திரன் என்ற பெயர்தான் நிலவின் சுயபெயர் அந்த சந்திரன் என்ற சொல் ஆண் தன்மையை குறித்து நிற்கிறது. அப்படியிருக்க அத்தன்மையை ஆணிற்கு ஒப்பிடு (வதில்லை) ஒப்பிடுவதிலும் பார்க்க பெண்களுக்கே அதிகம் ஒப்பிடுகின்றனர். அப்படி ஒப்பிடப்படுகின்ற பெண் ஆண்தன்மையுடையவளோ?.

அறிந்தோ அறியாடிலோ ஆரம்ப கால எழுத்தாளர்கள் அடுக்கிவைத்த வார்த்தைகள் எமக்குப்பல்வேறு கட்டங்களில் படிப்பினையாக அமைந்துள்ளது, எனினும் எமது சிந்தனைத்திரிக்கும் கொஞ்சம் வேலை கொடுக்க வேண்டுமல்லவா?

எனது அழுத்தமான கருத்தாவது... எக்காரணத்திலும் “பெண்ணை ஆணுடன் ஒப்பிடக்கூடாது” பெண்ணானவள் பெண்தான் ஆணானவன் ஆண்தான். “பெண்குயின்” பறவை இனந்தான் ஆனால் அதனால் பறக்க

முடியாதே!அதனுடன் பருந்தினைப் பறப்பதற்குப்போட்டிபோடமுயற்சிக்கலாமா அது நீருக்குள் மேற்கொள்ளும் வித்தையினை "பருந்து" மேற்கொள்ள நினைத்தால் பருந்தின் நிலை என்னவாகும்?

ஒப்பீடு என்பது ஒரே இனத்தின், ஒரேதன்மையின்,ஒரே நிலையில் பார்க்க வேண்டும்.

*1கிலோ **பஞ்சின்** நிறையும் ஒருகிலோ **இரும்பின்** நிறையும் அவற்றின் அளவிலும் அடர்த்தியிலும் வேறுபடலாமே ஒழிய நிறையில் வேறுபடுமா?*

நிறையில் ஒன்றுதானே என்பதற்காக அவற்றைச் சமமாக ஒப்பிட முடியுமா? பஞ்சு அதன் தன்மையில் இருந்து மாறுபடும் வரையில் அதனைப் பஞ்சுடன்தான் ஒப்பிட முடியும்.

ஒரே மரத்தில் இருந்து பெறப்பட்ட பஞ்சினை பல்வேறு உற்பத்திக்குப்பயன்படுத்திய பிறகு மீண்டும் அவற்றை ஒன்றாக ஒப்பிட முடியுமா? அது போலவே ஒருதாய்வயிற்றில் இருந்து பிறந்தாலும் ஆண் ஆணினத்தோடு மட்டும் ஒப்பிட வேண்டும், பெண் பெண்ணினத்தோடு மட்டும் ஒப்பிடப்பட வேண்டும். அதிலுங்கூட ஒரே வயதுடனுத் ஒரே ஆராக்கியத்துடனும் ஒப்பிடப்பட வேண்டும்.

ஓப்பீட்டளவில் 1000ம் ஆண்டு 25 வயதுடைய ஆண் மேற்கொண்ட சாதனையுடன் 2008ம் ஆண்டு 25 வயதுடைய ஆணினை ஒப்பிட்டுப்பார்த்து ஏற்றதாழ்வை அறிந்து கொள்ளலாமே!!!...

பெண்களின் சிறப்பும் அவர்களின் பெருமையும் பற்றி ஏற்கனவே பலஇடங்களில் எழுதியுள்ளேன். http://www.tamilnation.org/forum/arugan/060601katpu.htm "**கற்பு என்பது நம்பிக்கை**" என்ற இந்த ஆக்கத்தை பார்க்கவும்.

கன்னி, மகளீர், பெண்கள்,மாது, மங்கை, ... இந்த வகையில் பார்க்கும் போது

உலக ரீதியில் எனக்கு வெறுப்புத்தருகின்ற விடயத்தில் இதுவும் ஒன்றாகக்காணப்படுகிறது, அதாவது, பெண்களின் உடலை, உணர்ச்சிக்காக மட்டும் அதிகம் பயன்படுத்துவதும், அத்தோடு, விளம்பரங்களுக்கும் சரி, வேறு விடையங்களுக்கும் சரி கவர்ச்சியைக்காட்டி கொச்சைப்படுத்துவதும் அருவெருப்பைத்தருகிறது.

உலகம் இன்னமும் காமத்திற்கு முக்காடுபோடுவதில் இருந்தே கொஞ்சமென்றாலும் நாகரீகம் மிஞ்சிக்கிடப்பது தெரிகிறது. யாரும் பிரபல்யமாக காமம் சார்ந்த விடயங்களில் ணடுபடுவதில்லை. இன்னும் சில காலத்தில் அதுவும் சிதைந்து விடும் காரணம் பரிசுகெட்ட வேலையாக, ஓரினத்திருமணத்தை உஉலகின் பெரும் வல்லரசின் சில எற்றுக்கொண்டு சட்டத்தையும் அதற்குச் சார்பாக ஏற்படுத்தியுள்ளது. இப்படிப்போனால் நாகரீகத்தின் தன்மையும் இயறகையின் அமைப்பும் குலைந்து போகாதோ?... இப்போது சரியென்று படுகிற விடையம் பல வருடத்தின் பின் பிழையென்றுபடுமே என்று அச்சப்படுகிறேன்.

பெண்கள் எதைத்தான் செய்யவில்லை?

ஆண்களைவிட மேலான விடையத்தைச் செய்துள்ளார்கள் என்றுதான் நான் சொல்வேன், நாங்கள் எதைஎடுத்தாலும் வீதாசாரத்தில் ஒப்பிடுவது எமது வழக்கம். அதேபோல் ஒப்பீட்டளவில் பார்த்தால் அவர்களை செயற்படுத்துபதற்கு பெற்றோர் தடைவிதிப்பர், அல்லது கணவர் தடைவிதிப்பர், அல்லது சுற்றத்தார் தடைவிதிப்பர், அல்லது பிள்ளைகள் தடைவிதிப்பர்... இவைபோன்ற தடைகளால் ஒரு பெண்ணுடைய சுய திறமை அடக்கப்பட்டு விடுகிறது. இவ்வாறான தடைகள் ஆண்களுக்கு இல்லை அதனால் அவர்களால் எவ்வாறான செயற்பாட்டிலும் ஈடுபடக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஓப்பீட்டளவில் **பெண்களுக்குத் தடைகள்தான் அதிகமே யொழிய திறமை குறைவல்ல**. ஆனால் ஒருவிடையத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், ஆண்களோடு பெண்களை ஒப்பிடும் போது, அறிவு ரீதியில் ஒப்பிட வேண்டுமே யொழிய பலத்தேடு ஒப்பிடக் கூடாது. போட்டிகளில் வயதுப்பிரிவு காட்டுவது போல், பால்பிரிவினையும் பலத்தில் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். மற்றப்படி பெண்கள் எந்தவகையில் குறைந்தவர்கள்.

மகளீர் அமைப்புக்கள் பல்லாயிரம் உலகரீதியில் இருந்தாலும், அவ்வமைப்புக்களின் அடிப்படைப் பின்னணியில் ஆண்களே முன்னுரிமை வகிக்கின்றனர். இதற்குக்காரணம், பெண்கள் அடிப்படையில் ஆண்களின் மனதில் இரண்டாவது இடத்தில் இருப்பதே!

ஒரு ஆணின் உயர்விற்குப் பெண்தான் காரணம் என்ற போலிப் புகளாரத்தை என்னால் ஏற்கமுடியவில்லை, இது முன்னணிக்கு விடப்படாத பெண்களைச்சமாதானப்படுத்தும் மாலைகள்.

இன்றுவரை எனது தந்தை, பெற்றோர் என்ற ரீதியில் எனது தாய்க்குச் சமவுரிமை கொடுக்கவில்லை. எனது எண்ணப்படி தந்தை, தாய் இரண்டும் வேறுவேறல்ல. குனணி பாவனையில் ஈடுபடுவோராக நீங்கள் இருந்தால் இவ்வாறு சொல்லலாம் “ஒரே ஆவணத்தை பல கனணிக்கு தொடர்பு கொடுத்தது போல் (கொல்லக்கமந்தோ)” எங்கெல்லாம் பிரதி செய்த ஆவணத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் மூல ஆவணத்திலும் மாற்றம் இயல்பாகவே ஏற்பட்டிருக்கும். அது போல தாய்க்கு ஒருவிடையத்தைச் சொன்னால் அது தந்தைக்கு சொன்ன மாதிரி அது போல் தந்தைக்கு ஒரு விடையத்தைச் சொன்னால் அது தாய்க்குச் சொன்னமாதிரி. இதில் தாழ்வு மனப்பாங்கிற்கோ, தன்மானத்திற்கோ, பாசக்குறைபாட்டிற்கோ இடமில்லை.

பொதுவாக பிள்ளைகள் தாயிடம் தான் தகவல்களையும் பாசத்தையும் கூடுதலாகக்காட்டுவார்கள் ஏனென்றால் ததாய் வீட்டில் ஆளுமை இல்லாதவள்!!!... தந்தையிடம் பரிந்துரை செய்பவள்…

தற்போது புதிய வியாதி ஒன்று தொடங்கியுள்ளது…

அதாவது திருமணத்தின் பின் வேறு திருமணம், மறைமுகத் தொடர்பு, விவாகரத்து, தற்காலிகப் பிரிவு, தனிமையான வாழ்வு, …

எனக்குத்தெரிந்த ஒரு பெண் அவள் கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக கணவனின் தெடர்பின்றி வாழ்கின்றாள், ஒருஆணுக்கு இருக்கக்கூடிய ஆணவம் அகங்காரம் ஆளுமை செயற்திறன், அனைத்தினையும் அவளிடம் கண்டேன். அவள், கணவனால் தனிமையாக்கப்பட்டவளேயொழிய தனிமையானவள் அல்ல, ஒரு கைக்குழந்தையுடன் தனது கடினமான உழைப்பின் மத்தியிலும் தனக்கென்று ஒரு கௌரவத்துடன் வாழ்கின்றாள். ஆவளைச்சூழ அவளுடைய குடும்பம் இருக்கிறது, சுற்றத்தார் இருக்கின்றன, பல்வேறுபட்ட அமைப்புக்கள் இருக்கின்றன யாருக்கும் அவளைத்தெரியவில்லை! ஆவள்மூலம் பயனடைய எத்தனிக்கின்றனரேயொழிய அவளுக்குக்கையொடுக்க தயக்கம்காட்டுகின்றனர். ஒருவேளை அவளுடைய தாக்கத்தின் பயனாக அவள் றாங்கியுடையவளாகத்தெரியலாம் அதற்காக அப்படியே அவளை சமுகத்தில் விடமுடியாது என்பது உண்மையல்லவா?...

அந்தப்பெண்னை மணமுடித்த கணவனை சமுகம் என்ன செய்தது?

ஏற்கனவே எனது எழுத்துக்களில் பெண்தன்மையைப்பயன்படுத்தும் ஆண்களைப்பற்றி எழுதியுள்ளேன்.

உலகில் எந்தப்பாகத்தில் இருந்து பார்த்தாலும், அங்கு பெண்ணின் ஈடுபாட்டால் அசைக்கப்பட்ட சரித்திரம் காணப்படும்.

சரித்திரத்தில் இடம் பெற்ற நபர்களைப் பார்த்தால்…

விலக்கக்கூடியவர் விரல்விட்டு எண்ணக்கூடியவரே!

## பெண் இனத்தவள் ஆணுடன் ஒப்பீட்டுப்பார்க்கக்கூடியவள் அல்ல

அவள், இயற்கையின் படைப்பில் அல்லது ஆண்டவன் படைப்பில் அற்புதமானவள். அவளுடைய அற்புதத்தன்மையினைப்புரிந்து கொள்ளாத மேதாவிகள் அவளை அற்பமாக வர்ணித்துவிட்டார்கள். அதனால்தான் அவள்தற்போது ஆணுடன் ஒப்பிடப்படுகிறாள்.

உலகில் ஆண்தெய்வங்களிலும் பார்க்க பெண் தெய்வங்களே அதிகம்…

இலக்கியத்தில் ஆண்களை ஒன்றோடு ஒப்பீடுவதிலும் பார்க்க பெண்களை ஒப்பீடுவதே அதிகம்.

பெண்கள் பூஜிக்கப்படைக்கப்பட்டவர்கள்.

அவர்களின் தன்மைக் கேட்டிற்கு ஆண்களே காரணம். அவளை ஆபரணப் பொருளாக மாற்றி ஆபாசத்திற்குள் தள்ளி, ஒரு பெண் தன் பெண்மையினை விட்டு ஆணைப்போல் செயற்படவைத்துவிட்டான். இப்போது, பெண் – ஆண் இருவரும் மனிதர்களாகத்தான் இருக்கின்றனர். தேய்வத்தன்மை அழிந்து விட்டது.

இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், தாம்பத்திய உறவு அறமாகக் கருதப்படுகிறது. அறம் என்பது மதம். அத்தகைய தாம்பத்தியம் தற்போது வியாபாரமாகிவிட்டது.பெண்களை இயந்திரமாக்கிவிட்டது…

இன்பம் உலகத்தில் உலகத்தில் காணப்படவேண்டிய உச்சகட்டம். ஆந்த இன்பத்தின் மூலம் புறப்படுகின்ற ரசாயண வாயுக்கள் இயற்கையுடன் அவ்வப்போது கலக்க வேணஇடும். இது இயற்கையின் சீர்செய்யும் திட்டம்.

பயம், அதிர்ச்சி, கண்ணீர், சூழ்ச்சி போன்றன இயற்கையின் சமநிலையினைப்பாதிக்கக் கூடியன, பெண்கள் மென்மையாகப் பாதுகாக்கப்படவேண்டியவள் அவளுடைய அசையுவுகள் இயற்கையினை மாற்றியமைக்கக்கூடியன.

**ஆனால் இப்போது ஆணிலும் மேலான வேகத்துடன் உலகத்தோடு போராடிக் கொண்டிருக்கிறாள் பெண்.**

**ஆண்கள் தாங்கிக்கொள்ள வேண்டிய பாரங்களையெல்லாம் தற்போது பெண்களே அதிகம் ஏந்திக் கொள்கின்றனர்**

குடும்பத்திலுஞ்சரி, அலுவலகங்களிலுஞ்சரி, அரசாங்கத்திலுஞ்சரி, அமைப்புக்களிலுஞ்சரி…

அவளுடைய முக்கியத்துவம் இன்றியமையாததாகிவிட்டது.

ஒருவிலை கூடிய பொருளை வாங்கினால் அதனை எவ்வாறு பொத்திப்பாதுகாக்கின்றோம். அப்படியிருக்க விலைமதிப்பற்ற பெண்ணை எப்படி அவளின் தன்மை கெட்டுப்போக விட்டோம்?.

சுயநலவாத, தற்பெருமைகொண ஆண்வருக்கத்தில் இருந்து புறப்படுகின்ற கொடுரமான எண்ணங்கள் பெண்கள் தொடர்பான விடயங்களை ஏழனஞ்செய்கின்றன. இதனால்…

பெண்நிலை தொடரும்…

இத்தாலியில் இருந்து

தமிழ் அருகன்